AKHBAR : MALAYSIA NANBAN
MUKA SURAT : 3
TARIKH : 15 FEBRUARI 2022
HARI : SELASA
SENTIMEN : POSITIF




# கல்விக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் Click, Pay & Earn 2022 பி.டி.பி.டி.என். புதிய வியூகம்




கோலாலம்பூர், பிப். 15- உயர் கல்விக்காக பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தேசிய உயர் கல்வி நிதியுதவிக் கழகம் (பி.டி.பி.டி.என்.) 2022 ஆம் ஆண்டில் மேலும் பல்வேறு வியூகங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

Shopee, BESTPay, SpayGlobal (SarawkPay) ஒத்துழைப்புடன் Click, Pay & Earn 2022 எனும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான இயக்கத்தை அக்கழகம் இவ்வாண்டு மேற்கொண்டு வருகிறது.

இவ்வியக்கத்தில் பங்கேற்கும் தரப்பினர் ஏற்பாடு செய்துள்ள, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வழிகளின் வாயிலாக பி.டி.பி.டி.என். கடனை திருப்பிச் செலுத்துவதை எளிதாக்கும் பொருட்டும் அதனை ஊக்குவிக்கும் வகையிலும் இதனை தாங்கள் தொடக்கியிருப்பதாக அதன் தலைமை நிர்வாகி அஹ்மட் டாசுக்கி அப்துல் மாஜிட் கூறினார்.

BESTPay, SpayGlobal (SarawkPay) ஆகிய செயலிகளை பயன்படுத்தி பி.டி.பி.டி.என். கடனை திருப்பிச் செலுத்தும் அனைவரும் இந்த Click, Pay & Earn 2022 இயக்கத்தில் பங்கேற்கலாம்.

இம்மாதம் 8 ஆம் தேதி தொடங்கி வரும் ஏப்ரல் (2022) 30 ஆம் தேதி வரையில் இது அமலில் இருக்கும். இதன் மூலம் கிடைக்கக்கூடிய சலுகைகளுக்கு தகுதிபெற வேண்டுமானால் பி.டி.பி.டி.என். கடன் பெறுநர்கள் குறைந்தபட்ச மதிப்பிலான தொகையைச் செலுத்தினால் மட்டும் போதுமானதாகும்.

இவ்வியக்கம் பற்றிய மேல் விவரங்களை அறிவதற்கு www.ptptn.gov.my என்ற அகப்பக்கத்தை வலம் வரலாம்.

AG09670/15/02/22

**TRANSLATION:**

The National Higher Education Fund Corporation (PTPN) organised various strategies to makes a return in 2022. This time around, the agency is collaborating with ShopeePay, BESTPay and SPayGlobal (formerly known as Sarawak Pay), to facilitate repayments and reward borrowers with vouchers exclusive to each platform. PTPTN has established a strategic collaboration with e-wallet partners to get borrowers to repay their loans and at the same time have the opportunity to get the rewards offered during the campaign period, said chief executive Ahmad Dasuki Abdul Majid via the agency's official statement. Borrowers who paid using BESTPay and SPayGlobal (formerly known as Sarawak Pay) also can take parti in this Click, Pay & Earn campaign 2022. This campaign starts on February 8, 2022 until April 30, 2022. If borrowers want to qualify for the offers available through this campaign, need to settle at least minimum amount. For more information, please visit PTPTN's official portal at www.ptptn.gov.my about Click, Pay & Earn 2022 campaign.